# DIOCESAN CIRCULAR LETTERS

**No. C-01/2019** **29.01.2019**

## பாலர்சபை தினம் - 10.02.2019

### ஆயரின் சுற்றுமடல்

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் அன்பான அருட்பணியாளரே, அருட்சகோதரிகளே, இறைமக்களே!

இறை அன்பும், அமைதியும் உங்களை நிரப்பிட உங்களை வாழ்த்துகின்றேன்.

குழந்தைகள் இனிமையானவர்கள்; பெற்றோர் மற்றும் சமூகத்துக்கு மகிழ்வைத் தரும் செல்வமாக உள்ளவர்கள். குழந்தைகள் நலமுடையவராக, ஆளுமை வளர்ச்சி பெறுபவராக, உயிரோட்டம் நிறைந்தவராக வாழ்வதுதான் சமூக நலனுக்கு அடையாளமாகவும், நாளைய சமூகம் குறித்த நம்பிக்கையாகவும் அமைகிறது.

நம் திரு அவை குழந்தைகளை உருவாக்கி உருக்கொடுக்கும் பணியில் மகிழ்வுடன் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. இந்நோக்குடன் 1856ஆம் ஆண்டு திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் அவர்களால் துவங்கப்பட்டு 120-க்கும் மேற்பட்ட நாடுகளில் செயல்பட்டு வருகிறது பாலர்சபை.

இயேசுவின் அன்புக்கு உரியவர்களாயிருக்கும் குழந்தைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, 10.02.2019 அன்று பாலர்சபை நாளாகக் கொண்டாட நம்மை அழைக்கிறது நம் திரு அவை.

இவ்விழாவைச் சிறப்பிக்கும் தருணத்தில், பரிவுடன் கவனிக்கப்பட்டு, மகிழ்வுடனும் மாண்புடனும் வளர வேண்டிய குழந்தைகள் இன்று அனுபவிக்கின்ற அவலங்கள் குறித்து சிந்திக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். பெற்றோரின் அன்பை உணர முடியாமல் ஏங்குகின்ற குழந்தைகள், பாலியல் வன்முறைகளுக்கு ஆளாக்கப்பட்டு துடிக்கின்ற குழந்தைகள், கைப்பேசிகளுக்கு அடிமைகளாக மாற்றப்படுகின்ற குழந்தைகள், பெற்றோருடைய விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகத் துன்புறுகின்ற குழந்தைகள் ஆகியோரை எண்ணும்போது குழந்தைகள் குறித்த நமது கடமைகள் மற்றும்